கற்பகம்

திங்கள் இதழ்

Katpakam

விலை ரூபா 10.00

மலர்-08 | நவெம்பர் - 2017 | இதழ்-93

குறளமுதம்-93

வள்ளுவர் வாய்மொழியை எத்திறத்தாரும் எளிதில் பொருளுணர்ந்து படிப்பதற்கு ஏதுவாக "கற்பகம்" தொடர்ந்து குறளமுதைத் தரும்.

அதிகாரம்-10 அறத்துப்பால் இனியவைகூறல்

முகத்தான் அமர்ந்துஇனிது நோக்கி அகத்தான்ஆம்
இன்சொ லினதே அறம்

ஒருவரைக் கண்டபொழுதே, முகமலர்ச்சியோடு விரும்பி இனிதாக நோக்கி, பின்பு அவர் நெருங்கி வந்ததும், அகமலர்ச்சியோடு கூடிய இனிய சொற்களைச் சொல்லுவதே அறமாம்.

பனை வள கூட்டுறவு நிறுவனங்கள் கூட்டுறவுக்கே வலுச் சேர்க்கின்றன!

வடக்கு கூட்டுறவு அமைச்சர் பெருமிதம்

பனை தென்னை வள கூட்டுறவு அமைப்புக்கள் உற்பத்தியாளர்களை அங்கத்தவர்களாகக் கொண்டு செயற்படுவதனாலும் இத் துறைசார்ந்த அனைவரும் சிறப்பாக தமது பணிகளை மேற்கொண்டு வருவதனாலும் இவ் அமைப்புக்கள் மிகவும் வெற்றிகரமாக இயங்கி கூட்டுறவுத் துறைக்கே பலம் சேர்த்து நிற்பதை நான் மனதாரப் பாராட்டுகின்றேன்.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு கூட்டுறவு அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் அவர்கள். வ ட மாகாண ப.தெ.வ.அ.கூ.ச.சமாசத்தினால் நடாத்தப்பட்ட் 95வது சர்வதேச கூட்டுறவுதினவிழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த மாதம் 21ம் திகதி சனிக்கிழமை சமாச கூட்டுறவாளர் மண்டபத்தில் சமாசத்தலைவர் திரு நா.கணேசன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அவர் உரையாற்றுகையில்,

(2ம் பக்கம் பார்க்க)

சேவைக்கால படி; புதிய சுற்றுநிருபம்!

கடந்த மேதினத்தில் வட மாகாண கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம் முன்வைத்த கோரிக்கைகளில் ஒன்றான கூட்டுறவுப் பணியாளர்களுக்கான சேவைக்காலப்படி வழங்குதல் தொடர்பான சுற்றுநிருபத்தினை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்ட சில பிரச்சினைகள் காரணமாக தொழிற்சங்கம் தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு கூட்டுறவு ஊழியர்களுக்கான சேவைக் கால படியினை பெற்றுக்கொடுக்க முயற்சி மேற்கொண்டிருந்தது.

தற்போது இப்பிரச்சினைகள் களையப்பட்டு, சேவைக்கால படியினை வழங்குவதற்கான புதிய சுற்றுநிருபம் வடக்கு கூட்டுறவு அமைச்சர், (7ம் பக்கம் பார்க்க)

சீட்டிழுப்பின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன

யாழ். மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கத்தினால் இம்மாதம் 10ம் திகதி அதிஷ்டலாபச் சீட்டிழுப்பிற்கான அதிஷ்டம் பார்க்கப்பட்டது.

(7ம் பக்கம் பார்க்க)

பல இலட்சம் ரூபாவில் நவீன கிளை நிலையம்

யாழ். மாவட்டத்திலுள்ள பனை தென்னை வள சங்கங்கள் தமது தலைமைக் காரியாலயங்களை சிறப்பாக அமைத்து செயற்பட்டு வருகின்றன. அதேபோல தமது கிராமிய வங்கிகளின் செயற்பாடுகளையும் சிறப்பாக மேற்கொள்வதோடு, (8ம் பக்கம் பார்க்க)

மதுவரி ஆணையாளருடன் கலந்துரையாடல்!

யாழ். மாவட்ட ப.தெ.வ. அ.கூ.நிறுவன பிரதிநிதிகளுக்கும் மதுவரி உதவி ஆணையாளர் திரு சோதிநாதன் அவர்களுக்குமிடையிலான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் சமாச கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் பத்திரிகைகளில் பனை, தென்னை மரங்களிலிருந்து கள்ளினை இறக்குவது தடை என்ற செய்தி வர்த்தமானியில் வந்திருந்ததாக செய்தி வெளிவந்திருந்தது.

(7ம் பக்கம் பார்க்க)

தொழில் பாதிப்பு நிவாரணம் வழங்கல்

தொடர் மழையினால் தொழில் பாதிப்படைந்த அங்கத்தவர்கள், மற்றும் பணியாளர்களுக்கு உலர் உணவுப் பொதிகளை சில சங்கங்கள் வழங்கியுள்ளன.

அச்சுவேலி சங்கம் தமது அங்கத்தவர், பணியாளர்கள் உள்ளிட்ட 150ற்கு மேற்பட்டவர்களுக்கு

(7ம் பக்கம் பார்க்க)

சிந்தனைத்துளி

"இலட்சியமும், அர்ப்பணிப்பும் அற்ற கூட்டுறவினாலோ, அல்லது கூட்டுறவாளனாலோ எதையும் சாதித்துவிட முடியாது" –அறிஞர்–

கற்பகக்கரு

கூட்டுறவுதினம்

உலக மக்களினால் வெரிதும் விரும்பப்படும் ஒரு துறையாக கூட்டுறவுத்துறை விளங்குகின்றது. இக்கூட்டுறவுத்துறையானது இரண்டாம் உலக யுத்தத்தின் போது பாதிக்கப்பட்ட மக்களின் உணவுத் தேவையினை பூர்த்திசெய்யும் வகையில் பகிர்ந்துண்டு வாழும் பண்பினை ஏற்படுத்தியது. இக்கூட்டுறவுப் பண்பு அன்று மக்களிடம் ஏற்படாவிட்டால் யுத்தத்தால் இறந்த மக்களின் தொகையைவிட பட்டினியால் இறந்த மக்களின் தொகையே அதிகரித்திருக்கும்.

ஏனெனில் வலுவுள்ளவர்கள் நிறைவான உணவினையும் வலுவற்றவர்கள் எதுவித உணவினையும் பெற்றுக்கொள்ளமுடியாத நிலைமை அன்று ஏற்பட்டிருக்கும். ஆனால் கூட்டுறவுப் பண்பின் அடிப்படையில் கிடைக்கின்ற உணவுப் பொருட்களை பகிர்ந்து வழங்கும் பண்பினை கூட்டுறவு அமைப்பு அன்றே ஏற்படுத்தியது. அன்று தொட்டு இன்றுவரைக்கும் கூட்டுறவுத்துறையானது தனது கொள்கையிலிருந்து விலகாது செயற்படுவது தான் மக்களின் மனதில் கூட்டுறவை நிலைநிறுத்தச் செய்துள்ளது. இலங்கையின் கூட்டுறவுத்துறையை நாம் அவதானித்தால் மக்களை வலிந்து கூட்டுறவுத்துறைக்குள் உள்வாங்கப்பட்ட நிலைமைகளை அவதானிக்க முடியும். அதனூடாக அவர்கள் பெற்ற நன்மைகளை மனதில்கொண்ட மக்கள் இத்துறையில் தம்மை தொடர்ந்து இணைத்துக்கொண்டனர்.

உற்பத்தியாளர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட கூட்டுறவு அமைப்புக்கள் குறிப்பாக பனை தென்னை வளங்களை உச்சமாகப் பயன்படுத்தும் பனை தென்னை வள சங்கங்களின் அங்கத்தவர்கள், கடல் வளங்களைப் பெறுகின்ற கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்கள் தமது உடலை வருத்தி, வியர்வை சிந்தி, உயிரைத் துச்சமாக மதித்து உற்பத்தியில் ஈடுபடுகின்ற அந்தப் புனிதமான தன்மையினை நாம் காணக் கூடியதாகவுள்ளது.

கிட்டத்தட்ட 60–70 அடி உயரம் கொண்ட பனை மரங்களில் உற்பத்தியினைப் பெறுவதற்காக காலையும் மாலையும் ஏறி இறங்கி உற்பத்தியைப் பெறுகின்ற உற்பத்தியாளர்களையும், இதேபோல் ஆழம் நிறைந்த ஆபத்தான கடல் தொழில் செய்கின்ற அங்கத்தவர்களை நாம் எண்ணிப் பார்க்கின்றபோது, இவ்வாறான அர்ப்பணிப்புடன்கூடிய உழைப்பு கொண்ட தொழிலாளர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட கூட்டுறவு அமைப்பு தங்களுக்குள்ளேயே தெரிவுசெய்யப்பட்ட நிர்வாகசபை உறுப்பினர்களைக் கொண்டு அவர்கள் ஊடாக சிறந்த தீர்மானங்களை மேற்கொண்டு தமது பொருளாதார ரீதியான மேம்பாட்டினை அடைந்து கொள்ள வழிசமைத்தது இக்கூட்டுறவு அமைப்பே ஆகும்.

இதுபோல இத்துறையில் பணியாளர்களாக தம்மை இணைத்துக்கொண்ட ஒவ்வொரு பணியாளர்களும் மேற்படி அங்கத்தவர்களின் ஆபத்தான தொழில் நிலையினை கருத்தில்கொண்டு மேற்கொள்கின்ற தீர்மானங்களை அர்ப்பணிப்போடு நிறைவேற்றி வருகின்றமையும் இக்கூட்டுறவுக்கு ஒரு சிறப்பை ஏற்படுத்துகின்றது.

சர்வதேச கூட்டுறவுதினத்தை முன்னிட்டு சமாசம் நடத்துகின்ற சிறப்பு நிகழ்வுகளின் ஊடாக அனைவரையும் கூட்டுறவின்பால் ஈர்த்துக்கொண்டு பனைவள கூட்டுறவுத்துறையை வலுப்படுத்துவதே சமாசத்தின் நோக்கமாகும்.

"அங்கத்தவர்களின் ஆதரவே கற்பகத்தின் பலம்"
ஆசிரியர்

பனை வள நிறுவனங்கள் ...... (1ம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாண கூட்டுறவுத்துறை அமைச்சராக நான் பொறுப்பேற்ற நாளிலிருந்து கூட்டுறவுத்துறை தொடர்பான சகல விடயங்களையும் ஆர்வத்துடன் அறிந்துகொண்டேன். காரணம் வடக்கு மாகாணத்தில் பாரிய ஒரு துறையாக கூட்டுறவுத்துறை விளங்குவதோடு, கூட்டுறவுத்துறை சார்ந்த சகல நடவடிக்கைகளுக்கும் வடக்கு மகாணசபை பொறுப்பாக இருப்பதன் காரணத்தினால் எனது கவனம் இத்துறையில் செலுத்தப்பட்டது.

குறிப்பாக பனை தென்னை வள கூட்டுறவு அமைப்புக்களின் செயற்பாடுகளை அவதானித்தபோது, அவர்கள் உற்பத்தியாளர்களை அங்கத்தவர்களாகக்கொண்டு செயற்படுவதனாலும் இத்துறைசார்ந்த அனைவரும் சிறப்பாக தமது பணிகளை மேற்கொண்டு வருவதனாலும் இத்துறையில் மிகவும் வெற்றிகரமாக செயற்பட்டு வருகின்றனர் என்பதையிட்டு அவர்களை நான் பாராட்டுகின்றேன்.

ஏனைய சில கூட்டுறவு அமைப்புக்களை அவதானித்தபோது, அங்கே முதலில் அவர்களிடமிருந்து வருவது "நட்டம்" என்ற சொல்லே. ஆனால் பனை வள நிறுவனங்கள் அந்த சொல் என்னென்றே தெரியாமல் தமது நிறுவனத்தை நடாத்திவருவது மகிழ்ச்சிக்குரியது.

இத்துறை சார்ந்த அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு எனது பதவிக்காலம் வரைக்கும் என்னாலான சகல உதவிகளையும் வழங்குவேன். இன்றைய தினம் சமாசத்தினால் கௌரவிக்கப்பட்ட சிறந்த அங்கத்தவர்கள், பணியாளர்களையும், 2016ம் ஆண்டு பல்கலைக்கழகம் தெரிவு செய்யப்பட்ட 24 மாணவர்களையும் ஏனைய உயர் கல்விகளைப் பெற்றுக்கொண்ட 10 மாணவர்களையும் 5ம் ஆண்டு புலமைப் பரிசில் சித்திபெற்ற மாணவச் செல்வங்களையும் 95வது கூட்டுறவுதினவிழாப் போட்டிகளில் வெற்றிபெற்ற போட்டியாளர்களையும், முன்பள்ளி மாணவர்களையும் கௌரவித்து இவ்வளவு பெறுமதியான பரிசுப் பொருட்களையும் பணப் பரிசினையும் வழங்கிச் சிறப்பிப்பதிலிருந்து இந்நிறுவனங்களின் வளர்ச்சியை என்னால் காண முடிகின்றது. இந்நிறுவனங்கள் தொடர்ந்தும் முன்னேற எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன் என்றார்.

சமாசத் தலைவர் தனது தலைமையுரையின்போது சமாசம் கடந்த 5 வருடங்களாக சர்வதேச கூட்டுறவுதின விழாவினை வெகு சிறப்பாக நடத்தி வருகின்றது. இவ்விழாவினை முன்னிட்டு பல போட்டிகளையும் நடாத்துவதோடு, சிறந்த அங்கத்தவர்கள், பணியாளர்கள் சிறந்த சங்கங்கள், கொத்தணிகள் போன்ற தெரிவுகளை நடத்துவதோடு பல்கலைக்கழகம், கல்வியியல் கல்லூரி, தொழில்நுட்பக் கல்லூரி, மற்றும் 5ம்ஆண்டு புலமைப்பரிசில் மாணவர்களையும் கௌரவித்து பரிசில்கள் வழங்கி வருகின்றோம். மேலும் சமாசம் இவ்வாண்டு தொடக்கம் சங்கங்களின் வளர்ச்சியில் கவனம் செலுத்தி அவற்றின் உற்பத்தியான போத்தலில் அடைக்கப்பட்ட பனங்கள்ளினை தென்னிலங்கைக்கு அனுப்புகின்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள சமாசம் தீர்மானித்துள்ளது. 2018ம் ஆண்டு தை தொடங்கி மார்கழி மாதம் வரைக்கும் தொடர்ச்சியாக யாழ் மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற பனங்கள்ளினை வெளி மாவட்டங்களுக்கு அனுப்புகின்ற நடவடிக்கைகளை சங்கங்கள் மேற்கொள்ளவேண்டும் எனத் தெரிவித்தார்.

அடுத்து வடக்கு மாகாண சபை உறுப்பினர் திரு ஏ.சிவயோகன் அவர்கள் தனதுரையில், நான் வடமராட்சியை பிறப்பிடமாகக் கொண்டவன், பனை வளத்தோடு எனது வாழ்வு ஒன்றிணைந்தது. இவ்வளம் சார்ந்த நிறுவனங்கள் என்னுடன் பெரிதாக தொடர்புகள் ஏற்படுத்திக் கொள்வில்லை. தற்போதுதான் மருதங்கேணி ப.தெ.வ.அ.கூ. சங்கமும் சமாசமும் என்னிடம் உதவி கேட்டிருந்தார்கள். எனக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து மருதங்கேணி சங்கத்திற்கு வெல்லத் தொழிற்சாலை அமைப்பதற்கான நிதியையும் சமாசத்தின் மண்டபத்திற்குரிய ஒரு தொகுதி கதிரைகளையும் நான் வழங்கியிருந்தேன். ஏனைய சங்கங்களும் என்னிடம் உதவி கோரினால் அதனை செய்வதற்கு நான் தயாராக உள்ளேன். சமாசத்தின் இன்றைய விழா சமூக அபிவிருத்தி கருதி சமாசம் மேற்கொண்டு வரும் சேவையை எடுத்துக் காட்டும் வகையில் அமைந்திருப்பது

(7ம் பக்கம் பார்க்க)

கோண்டாவில் சங்கத்தில் 95வது சர்வதேச கூட்டுறவுதின விழா

கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் 95வது சர்வதேச கூட்டுறவு தின விழாவினை அண்மையில் சிறப்பாக நடாத்தியது.

சங்கத்தின் தலைமைக்காரியாலயத்தில் சங்கத்தின் தலைவர் திரு அ.சின்னராசா அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிற்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட கூ.அ.உ. ஆணையாளர் திரு பொ.மோகன் அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக சமாசத் தலைவர் திரு நா.கணேசன், கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு தி.சுந்தரலிங்கம் வலிகாமம் கொத்தணித் தலைவர் திரு செ.செல்வராசா ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக த.கா.கூ.அ. அலுவலர் திருமதி ச.சியாமளா, கூ.அ.அலுவலர் திரு இ.தனுசன், சமாசப் பொதுமுகாமையாளர் திரு பொ.செல்வராசா, வலிகாமம் கொத்தணி பொதுமுகாமையாளர் திரு க.சுதாகரன், வடமாகாண கூ.ஊ.தொ. சங்கத் தலைவர் திரு செ.பாலேந்திரன், சித்த வைத்திய கூ.சங்க தலைவர், முகாமைப்பணிப்பாளர் வலிகாமம் ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் ஓய்வுபெற்ற, சிறந்த உறுப்பினர், பணியாளர், 25 வருட சேவையாளர்கள், முன்பள்ளி மாணவர்கள், சிறுவர் சேமிப்பாளர்கள் ஆகியோர் கௌரவிக்கப்பட்டதுடன் கல்விக்கொடை வழங்கல், மாணவர்களுக்கான வங்கிப் புத்தகம் வழங்கல், பாடசாலை உபகரணம் வழங்கல், மாதாந்த ஓய்வூதியம் வழங்கல், சிறந்த கிளை நிலையங்களுக்கான பரிசில் வழங்கல் ஆகிய நிகழ்வுகளும் இடம்பெற்றன. பதிவுகளை கீழே காணலாம்.

சமாசத்தினால் நடத்தப்பட்ட 95வது சர்

ர்தேச கூட்டுறவுதின விழாவின் பதிவுகள்

வலிகாமம் கொத்தணியின் 95வது சர்வதேச கூட்டுறவுதின விழா நிகழ்வுகளின் பதிவுகள் சில..

வலிகாமம் ப.தெ.வ.அ.கூ.ச.கொத்தணி அண்மையில் 95வது சர்வதேச கூட்டுறவு தின விழாவினை சிறப்பாக கொண்டாடியது. இதன்போது உறுப்புரிமைச் சங்கங்களின் அங்கத்தவர், பணியாளர் மற்றும், மாணவர், மகளிர் உறுப்பினர், முன் பள்ளி சிறார்கள் உள்ளிட்டோர் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வின் சில பதிவுகளை காணலாம்.



பனை வள நிறுவனங்கள் ...... (2ம் பக்கத் தொடர்ச்சி)

எனக்கு பெருமை அளிக்கின்றது. என்றார்.

மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் தனதுரையில், இன்றைய நிகழ்வில் நான் கலந்து கொள்வதில் பெருமகிழ்வடைகின்றேன். காரணம் இக்கூட்டுறவு அமைப்புக்கள் தமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காக பெருந்தொகையான நிதியினை வழங்கி வருகின்றமை எதிர்காலத்தில் ஒரு உயர்ந்த கல்விச் சமூகத்தை உருவாக்கும் நற்பணியாகும். இப்பணிகளை ஏனைய கூட்டுறவு அமைப்புக்களும் பின்பற்றி தமது நிதி வலுவுக்கு ஏற்ப செயற்படுத்துவது காலத்தின் தேவை. கூட்டுறவு அமைப்புக்கள் உருவாக்கப்பட்ட காலம் தொட்டு மக்கள் வங்கி கூட்டுறவுத் துறையோடு பின்னிப் பிணைந்த ஒரு வங்கியாக அவர்களுடைய நிதிகளைப் பாதுகாப்பதோடு, வேண்டிய நேரங்களில் வழங்கி உதவி வருகின்ற ஒரு நிறுவனமாகவும் செயற்படுகின்றது எனவும் தெரிவித்தார்.

தொடர்ந்து மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் உரையாற்றினார். அவரைத் தொடர்ந்து வலிகாமம் கொத்தணியின் தலைவர் திரு செ.செல்வராசா அவர்கள் தனதுரையில், பனை வள கூட்டுறவு சங்கங்கள், கொத்தணிகள் கடந்த பல வருடங்களாக வரி செலுத்துவதிலும் தமது கிளை நிலையங்களுக்கான அனுமதி பெறுவதிலும் பலவிதமான சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றன. உற்பத்தி செய்யும்போது அதற்குரிய வரிகளை செலுத்துகின்ற நிலைக்கு சங்கங்கள் தள்ளப்பட்டிருப்பதனால் பாரிய நிதி நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றன. உற்பத்தி செய்யப்படும் பொருட்களை விற்பனை செய்யும்போது வரி செலுத்தக்கூடிய வாறான நிலையை வடக்கு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தி தந்தால் இந்நிறுவனங்களின் செயற்பாடுகளில் சமூக சேவை தொடர்பில் கூடுதலான கவனம் செலுத்தி இன்று சமாசம் மேற்கொள்கின்ற இந்நல சேவைகளை ஒவ்வொரு சங்கங்களும் மேற்கொள்ள வாய்ப்பாக இருக்கும் எனவும் தெரிவித்தார்.

இவ்விழாவில் 95வது சர்வதேச கூட்டுறவுதினத்தை முன்னிட்டு சமாசத்தின் உறுப்புரிமைச் சங்கங்களின் உறுப்பினர்கள், பணியாளர்கள், அவர்களின் பிள்ளைகள், மகளிர்குழு உறுப்பினர்கள், முன்பள்ளி மாணவர்கள் ஆகியோர் மத்தியில் பேச்சுப்போட்டி, கவிதைப் போட்டி, பொதுஅறிவுப் போட்டி, திருக்குறள் மனனப்போட்டி, நடனப் போட்டி, கயிறிழுத்தல் போட்டி, துடுப்பாட்டப் போட்டி, ஓட்டப்போட்டி என்பவற்றை நடாத்தி அதில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டதுடன், அங்கத்தவர், பணியாளர்கள் பிள்ளைகளில் பல்கலைக்கழகம், கல்வியியற்கல்லூரி, உயர் தொழில்நுட்பக் கல்லூரி என்பவற்றுக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள், மற்றும் 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்றவர்களுக்கு ஊக்குவிப்பு நிதி வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இவ்விழாவில் வடமாகாண கூ.ஊ.ஆணைக்குழு செயலாளர் திருமதி இ.நளாயினி, யாழ் மாவட்ட கூ.அ.உ.ஆணையாளர் திரு பொ.மோகன், மக்கள் வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் திரு க.சுசீந்திரன், யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு தி.சுந்தரலிங்கம், தென்மராட்சிக் கொத்தணியின் தலைவர் திரு க.துரைசிங்கம், வடமராட்சிக் கொத்தணியின் தலைவர் திரு செ.காந்தராசா சமாசத்தின் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு நா.குமணதாஸ் ஆகியோரும் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

சேவைக்கால படி ......

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வடமாகாண கூட்டுறவு ஆணையாளர் ஆகியோரின் அனுமதியுடன் வடக்கு கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு செயலாளரினால் சகல கூட்டுறவு நிறுவனங்களின் தலைவர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இச்சுற்றுநிருபம் தற்போது சங்கங்களுக்கு கிடைத்துள்ள நிலையில், கூட்டுறவுப் பணியாளர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்துள்ளதுடன், இதற்காக சம்பந்தப்பட்ட சகலருக்கும் நன்றியினைத் தெரிவித்துள்ளனர்.

மதுவரி ஆணையாளர் ....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இச் செய்தி தொடர்பாக ஆணையாளரிடம் சங்கப் பிரதிநிதிகளால் வினவப்பட்டபோது அவர், தென்னிலங்கையில் கித்துள் மரத்திலிருந்து கள் மட்டுமே பெற்றுக் கொள்ளமுடியும். அம்மரம் வேறு எந்தத் தேவைக்கும் பயன்படாத மரமாக காணப்படுகின்றது. ஆனால் பனை தென்னை மரங்களிலிருந்து நூற்றுக்கு மேற்பட்ட பயன்தரு பொருட்களை பெற்றுக்கொள்ளமுடியும் என்பதால் இவற்றிலிருந்து கள் உற்பத்தி செய்வதற்கு அரசு வரி அறவிட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் இது ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற விடயமாக காணப்படுவதால். இவ் அறிவித்தலில் கள் இறக்குவதற்கான தடைகள் ஏதும் இல்லை. சிங்கள மொழிபெயர்ப்பில் தவறுகள் ஏற்பட்டிருக்கலாம். எனவே தொழிலாளர்கள் கள் இறக்குவதில் பிரச்சினை இல்லை. எனத் தெரிவித்த உதவி ஆணையாளர், இது தொடர்பாக நான் விரைவில் பத்திரிக்கையில் அறிக்கை ஒன்றை வெளியிடவுள்ளேன் எனவும் தெரிவித்தார்.

சீட்டிழுப்பின் முடிவுகள்.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த சில வருடங்களாக இச்சீட்டிழுப்பு வருடாந்தம் நடாத்தப்பட்டு வருகின்றது. இதன்மூலம் ஈட்டப்படும் நிதியானது பணியாளர்களுக்கான ஓய்வூதியத் திட்ட செயற்பாடுகளுக்கு உதவும் வகையில் பேணப்பட்டு வருகின்றது.

இவ்வருடத்திற்கான சீட்டிழுப்பின் முதலாவது பரிசினை வலிகாமம் கொத்தணியும், இரண்டாம் பரிசினை தென்மராட்சிக் கொத்தணியும், மூன்றாம் பரிசினை சமாசமும் அன்பளிப்பாக வழங்கி உதவியிருந்தன.

சீட்டிழுப்பில் வெற்றிபெற்ற இலக்கங்கள் வருமாறு,

1ம் பரிசு- 18007, 2ம் பரிசு - 08224, 3ம் பரிசு - 11240 மற்றும் 50 ஆறுதல் பரிசுகளுக்கான வெற்றி இலக்கங்கள் வருமாறு,

02556, 19506, 14818, 11915, 04478, 17350, 22181, 09170, 22392, 22609, 03142, 09899, 08625, 21095, 07378, 07772, 24866, 19322, 07291, 22476, 11213, 17390, 00136, 21739, 11025, 09573, 11506, 05286, 21524, 00124, 13683, 21390, 20517, 00186, 18867, 02189, 03464, 08807, 13472, 11126, 16113, 18488, 03126, 19429, 23166, 21446, 01129, 07162, 08050, 22751, 22181, 21095 ஆகிய இலக்கங்களே வெற்றி இலக்கங்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இவ் வெற்றி இலக்கங்களுக்குரிய ரிக்கட்களை வைத்திருக்கும் வெற்றியாளர்கள் தங்களுக்குரிய பரிசில்களை இம்மாதம் 16ம் திகதி சமாசத்திற்கு நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம் என இச்சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

கூட்டுறவு சபையின் கூட்டுறவுதின விழா

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை கடந்த மாதம் 95வது சர்வ தேச கூட்டுறவுதின விழாவினை நடாத்தியது.

இதில் 25 ஆண்டுகள் கூட்டுறவு சேவையை பூர்த்தி செய்த பணியாளர்கள் அனைவரையும் அழைத்து கௌரவிப்பு நிகழ்வினை நடத்தியுள்ளது.

பல இலட்சம்... (1ம் பக்கத் தொடர்ச்சி)

புதிதாக அமைக்கப்படுகின்ற கிளை நிலையங்களை நவீன முறையில் அமைத்து வருகின்றன.

கடந்த மாதம் கோண்டாவில் சங்கம் சுமார் 40 இலட்சம் ரூபா செலவில் நவீன வசதிகள் கொண்ட கிளை நிலையம் ஒன்றை அமைத்திருந்தது. இதேபோல் இம் மாதம் மானிப்பாய் சங்கமும் நவீன கிளை நிலையம் ஒன்றினை அமைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

தொழில்....... (1ம் பக்கத் தொடர்ச்சி)

தலா 5 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை வழங்கியுள்ளன. இதேபோல சுன்னாகம் சங்கம், யாழ்ப்பாணம் சங்கம், மானிப்பாய் சங்கம் என்பனவும் உலர் உணவுப் பொதியினை தமது அங்கத்தவர், பணியாளர்களுக்கு வழங்கியுள்ளன. ஏனைய சங்கங்களும் இதனை வழங்குவதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன.

பாதிக்கப்பட்ட தொழிலாளருக்கு சமாசம் நிதியுதவி

இவ்வாண்டு ஜுலையில் நடைபெற்ற பனை எழுச்சி வாரக் கண்காட்சிக்கான முன் ஏற்பாடுகளை மேற்கொணடிருந்த கூலித்தொழிலாளரான க.சுப்பிரமணியம் கொட்டகை அமைக்கும் பணியின்போது தவறிவிழுந்து கால் முறிவடைந்து கடும் பாதிப்படைந்தார். இவரின் நிலைமையை கருத்தில் கொண்ட சமாசம், தனது அங்கத்துவ சங்கங்களிலிருந்து சேகரித்த 1 இலட்சம் ரூபா பணத்தினை சமாசத் தலைவர் பாதிக்கப்பட்டவரின் வீட்டுக்கு நேரில் சென்று வழங்கினார்.

இதே போன்று வடமாகாண கூட்டுறவு திணைக்களமும் ஏனைய மாவட்ட பனைவள கூட்டுறவு அமைப்புக்களும் பாதிக்கப்பட்ட தொழிலாளருக்கான ஒரு தொகை நிதியினை வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நவீன கிளை நிலையம் திறப்பு

கோண்டாவில் ப.தெ. வ.அ.கூ.சங்கம் நவீன வசதிகளுடன் கூடிய கிளை விற்பனை நிலையம் ஒன்றை அமைத்து அண்மையில் திறந்து வைத்துள்ளது.

இணுவில் புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் சுமார் ரூபா 40 இலட்சம் செலவில் அனைத்து வசதிகளுடன் நுகர்வோரை திருப்திப்படுத்தக் கூடியவகையில் இந் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

எமது கொத்தணியின் தயாரிப்பான

வறணி
பனஞ்சாராயம்

தற்போது 750 மி.லீற்றருடன், 375, 180 மி.லீற்றர் ஆகிய அளவுகளிலும் கிடைக்கின்றன.

கல்வி மேம்பாட்டுத் திட்டங்கள்

பாலர் பாடசாலை மாணவர், ஆசிரியர்களுக்கு இலவச சீருடைத்துணி வழங்கல்

வாடகை உழவு இயந்திர சேவை

நலன்புரித் திட்டங்கள்

அங்கத்துவ சங்கங்களின் அங்கத்தவர், பணியாளர்களுக்கான பல்வேறு நலத்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.

தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி
(வரையறுக்கப்பட்டது)

பருத்தித்துறை வீதி,
வரணி

021 205 0854

இப்பத்திரிகை சமாசப் பதிப்பகத்தினால் அச்சிடப்பட்டு, இல.53, சோமசுந்தரம் லேன், சுண்டுக்குளியில் உள்ள வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 2017ம் ஆண்டு நவெம்பர் மாதம் வெளியிடப்பட்டது.